# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**அனுப்புதல்**

திரு. தி. ரவிசந்திரன், பி.காம்.,
உதவி இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
குமரன் வணிக வளாகம், 2–வது தளம்,
குமரன் சாலை, திருப்பூர். – 1.

**பெறுதல்**

ஆணையாளர்,
வெள்ளகோவில் நகராட்சி,
திருப்பூர் மாவட்டம்

**ந.க.எண் 208 / த 1 / 2018, நாள் 08/05/2018**

அய்யா

**பொருள் :** தணிக்கை அறிக்கை – வெள்ளகோவில் நகராட்சியின் – 2016–17–ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதிக் கணக்குகள் மற்றும் அனைத்து நிதிகளுக்கான தணிக்கை அறிக்கை வெளியிடுதல் – குறித்து.

**பார்வை :** 1) அரசாணை எண். 87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 05.03.2002
2) அரசாணை எண். 145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, (எம்ஜி2) நாள். 22.10.2002.

********

பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையின்படி திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சியின் 01.04.2002 முதல் இயல்புநிலை கணக்குகள் வைப்புமுறை செயல்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் இந்நகராட்சியின் வருவாய் (ம) மூலதன நிதி, மத்திய அரசு வேலை வாய்ப்புத் திட்ட மற்றும் இதரக் கணக்குகளுக்கான 2016-17 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட வருவாய் செலவுக் கணக்கு மற்றும் 31.03.2017 அன்றைய ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இதர கணக்குகளுக்கான வரவு செலவு கணக்குகளின் நகல்களுடன் இரு நகல்களில் அனுப்பி வைக்கப்படுகிறது.

பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி இத்தணிக்கை அறிக்கையினை நகராட்சி மன்றத்தின் பார்வைக்கு வைத்து இத்தணிக்கை அறிக்கை கிடைத்த இரு மாதங்களுக்குள் பதில்களை இவ்வலுவலகத்திற்கு மன்ற அனுமதி பெற்று மூன்று நகல்களில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இத்தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதலை உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

08/5/18

உதவி இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கை,
திருப்பூர் மாவட்டம்

இணைப்பு – 2016–17–ம் ஆண்டு தணிக்கை அறிக்கை ஆண்டு கணக்குகளுடன்

நகல்

1) இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) சிறப்பு பணி அலுவலர் / மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, கோவை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4) நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர்.
5) துணை மாநிலத் தலைமைக் கணக்காயர், லேகா பரிக்ஷா பவன், 361 அண்ணா சாலை, சென்னை.

Scanned with OKEN Scanner

உள்ளாட்சி நிதித் தணிக்கை

அனுப்புநர்

திரு.ந.மணிவண்ணன். எம்.காம்.,
சிறப்புப் பணி அலுவலர்,
மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
மாவட்ட நூலக ஆணைக்குழு கட்டிடம்
ஒன்பது தளம், நகர்மண்டபம்,
கோயம்புத்தூர்.1

பெறுநர்

ஆணையாளர்
வெள்ளகோவில் நகராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

நகராட்சி அலுவலகம்
19 JUN 2018
வெள்ளகோவில்

ந.க.எண். 672/ 2018 /த4 நாள். 30.05.2018

அய்யா,

பொருள்: தணிக்கை – திருப்பூர் மாவட்டம் – வெள்ளகோவில் நகராட்சியின் 2016– 17 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதிக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை – இழப்பு மற்றும் கடுங்குறைபாடுகள் குறித்த சிறப்புக் கடித தணிக்கை அறிக்கை பத்திகள் விபரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை: 1. அ.ஆ.எண். 145 ந.நி.ம.கு.வ.துறை நாள். 22.10.2002.
2. அ.ஆ.எண். 2 ந.நி.ம.கு.வ.துறை நாள். 03.02.2006
3. திருப்பூர், உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, ந.க.எண். 208 /2018 /த1 நாள். 08.05.2018.

-----

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சியின் 2016–17 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதிக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கையில் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் தணிக்கைத் தடை பத்திகளின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

| வ. எண். | செயல் அலுவலர் பெயர் மற்றும் பதவி | தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திகள் விபரம் |
|---|---|---|
| 1. | திரு.இ.ஷாஜஹான்<br>ஆணையாளர்<br>01.04.2016–31.03.2017 | 10, 11, 12 (அ,ஆ), 13(அ,ஆ), 14 (1,2,3,4), 15, 16, 17, 18, 19 (அ, ஆ), 20, 21, 22, 23(அ, ஆ), 24(அ,ஆ,இ), 25(அ, ஆ), 26(அ,ஆ,இ) மற்றும் 27 பட்டும் |

இப்பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதி இழப்புகளும் கடும் குறைபாடுகளும் மேற்கண்டவாறு ஆணையாளர்களாக தங்கள் அலுவலகத்தில் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்டுள்ளன. அப்பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இழப்புகளை ஈடு செய்யவும், கடும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு மாதங்களுக்குள் பதில் அளிக்க சம்மந்தப்பட்ட ஆணையாளர் பார்வையில் காணும் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner

பார்வையில் காணும் அரசாணையின்படி தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் இழப்புகளை ஈடு செய்யவும் குறைபாடுகளை களையவும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அந்நிறுவனத்தில் தற்போது பொறுப்பிலுள்ள ஆணையாளர் பணியாகும் என்பதால் மேற்காணும் நிறுவனத்தின் தற்போதைய ஆணையாளர் என்ற முறையில் இத்தணிக்கைத் தடைகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்காள்ளுமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தணிக்கைத் தடைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கோப்புகள் செலவுசீட்டுகள் அளவுப்புத்தகங்கள் மற்றும் இதரஆவணங்கள் தணிக்கைக்கு அளிக்கப்படாமைக் குரிய வரிவிதிப்பில் குறைபாடுகள் தொகை கூடுதலாக வழங்கியது தொகை பெறப்பட்டமைக்குரிய ஒப்புகை பெறப்படாமை முதலிய குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் ஆவணங்களை தணிக்கைக்கு அளிக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளக் கோரப்படுகிறது.

தணிக்கைத் தடைகளில் சுட்டப்பட்ட இழப்புகள் குறைபாடுகளுக்கு முன்னாள் ஆணையாளர் தான் முழுப் பொறுப்பாவார் என்பதால் தங்களால் நடவடிக்கை எடுக்க இயலாத நிலை இருப்பின் அதனை அன்னாருக்கு தெரிவித்து அதன் விபரத்தினை இத்துறைக்கு தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கடிதம் பெறப்பட்டமைக்கு ஒப்புதல் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சிறப்புப் பணி அலுவலர்,
மண்டல இணை இயக்குநர் அலுவலகம்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
திருப்பூர் மண்டலம் (இருப்பு)
கோயம்புத்தூர்.1

05/06/18

1. உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, திருப்பூர் மாவட்டம்
2. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், திருப்பூர்

Scanned with OKEN Scanner